


**13.06.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. அஹமதாபாத் விமான விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

2. யோக கலையை முன்னெடுத்துச்செல்ல மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய ஆயுஷ் இணை அமைச்சர் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

3. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்ற சம்பவங்கள் குறைவாக நடைபெறும் மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. நீலகிரி, கோவை, மாவட்டங்களில் இன்றும் நாளையும் மிக கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. சீனாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு சித்தார்த், சசிகுமார் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

இனி விரிவான செய்திகள்

<u>பிரதமர்</u>

241 பேர் உயிரிழந்த அஹமதாபாத் விமான விபத்தில் காயமடைந்தவர்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி சிவில் மருத்துவமனையில் இன்று சந்தித்து பேசினார்.

இத்துயரமான சம்பவத்தால் நாட்டு மக்கள் பெரும் அதிர்ச்சியில் உள்ளதாகவும், ஏராளமானோர் உயிரிழக்க காரணமான இந்த சம்பவம் குறித்து விவரிக்க வார்த்தைகள் இல்லை என்றும் பிரதமர் தமது சமூகவலைதள பதிவில் கூறியுள்ளார்.

நெருக்கமானவர்களை இழந்து துயரத்தில் வாடும் குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொண்ட பிரதமர் இந்த சம்பவத்தால் ஏற்பட்டுள்ள வெற்றிடம் ஈடு செய்ய முடியாதது என்பதை தம்மால் புரிந்துகொள்ள முடிவதாக கூறினார்.

விமான விபத்தில் உயிர் பிழைத்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் பிரிட்டன் நாட்டின் இந்திய வம்சாவளியை சேர்ந்த விஷ்வாஸ் குமாரை பிரதமர் சந்தித்து பேசினார்.

பிரதமரிடம் விமான விபத்து குறித்து அவர் எடுத்துரைத்ததோடு உயிர் தப்பியது குறித்தும் விளக்கமளித்தார்.

விமான விபத்து நடந்த இடத்தை பார்வையிட்ட பிரதமர், அங்கு அதிகாரிகளும் பல்வேறு குழுவினரும் அயராது பணியாற்றிவருவதாக எடுத்துரைத்தார்.

கற்பனை செய்து பார்க்க முடியாத இந்த பெரும் துயரத்தில் தங்களது அன்புக்குரியவர்களை இழந்து நிற்போருடன் தமது எண்ணங்கள் நிற்பதாக பிரதமர் கூறினார்.

இந்தசம்பவத்தில் உயிரிழந்த குஜராத் முன்னாள் முதலமைச்சர் விஜய் ரூபானியின் குடும்பத்தினரையும் பிரதமர் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

இதனிடையே விமான விபத்தில் உயிரிழந்த அடையாளம் தெரிந்த 4 சடலங்கள் பிரேத பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அஹமதாபாத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் விமான நிலையத்திலிருந்து நேற்று பிற்பகல் மணி 1.38க்கு லண்டன் புறப்பட்ட போயிங் ரக விமானம் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விபத்துக்குள்ளானதில் விமான பணியாளர்கள் 12 பேர் உட்பட 241 பேர் உயிரிழந்தனர்.

இதனிடையே சிவில் விமான மருத்துவமனையில் 32 பேர் தற்போது சிகிச்சை பெற்று வருவதாக மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் ராகேஷ் ஜோஷி தெரிவித்துள்ளாா.

கடுமையான தீக்காயங்களால் பாதிக்கப்பட்ட சில மருத்துவர்களை தவிர ஏனையோரின் நிலைமை சீராக இருப்பதாக அவர் கூறினார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமாக அனைத்து நடவடிக்கைகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

***********

<u>பிரதாப் ராவ் ஜாதவ்</u>

உலகம் முழுவதும் நல வாழ்வை உறுதி செய்யும் வகையில் யோகா பயிற்சியை முன்னெடுத்து செல்ல மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய ஆயுஷ் இணை அமைச்சர் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

ஆகாஷ்வாணி செய்திப்பிரிவிற்கு அவர் அளித்த பேட்டியில் கடந்த 11 ஆண்டுகளாக யோகாவை பிரபலப்படுத்த இந்தியா பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டினார்.

2014ஆம் ஆண்டு ஆயுஷ் அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டதையும் அவர் எடுத்துரைத்தார்.

பணியிடங்களில் இடைவேளையின்போது 5 நிமிடங்கள் யோகா பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சருடனான இந்த நேர்முகம் இன்றிரவு ஒன்பதரை மணிக்கு ஆகாஷ்வாணி அலைவரிசைகளில் ஒலிபரப்பாகும்.

***********

விக்ரம் மிஸ்ரி

இந்தியா சீனா இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து மத்திய வெளியுறவுத்துறை செயலர் திரு.விக்ரம் மிஸ்ரி அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் சன்-வேடாங்குடன் புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.

மக்கள் சார்ந்த பிரச்சனைகளுக்கு உயர் முன்னுரிமை வழங்கி இருநாடுகளுக்கிடையே உறவை மீண்டும் வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகள் இதில் இடம்பெற்றன.

கைலாஷ் மானசரோவர் யாத்திரையை மீண்டும் தொடங்க சீனா வழங்கிய ஒத்துழைப்பிற்கு திரு.மிஸ்ரா நன்றி தெரிவித்துக்கொண்டார்.

பொருளாதாரம் மற்றும் வர்த்தகம் சார்ந்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து செல்லவும் இருநாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இருநாடுகளுக்கிடையிலான நேரடி விமான போக்குவரத்தை மீண்டும் தொடங்கவும் இதில் முடிவெடுக்கப்பட்டது.

விசா தொடர்பான நடைமுறை சாத்தியங்களை எளிதாக்கி ஊடகங்கள் மற்றும் உயர்நிலை ஆய்வு பரிவர்த்தனைகளை தொடரவும் இதில் விவாதிக்கப்பட்டது.

***********

ஈரான்

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்களை நேற்று தொடங்கிய நிலையில் ஈரான் மற்றும் இஸ்ரேலில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்க இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

முன்னதாக ஈரானை இலக்காக கொண்டு **Operation Rising Lion** ராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேத்தன்யாஹூ அறிவித்தார்.

இதனிடையே இஸ்ரேல் இந்த தாக்குதலை ஒருதலை பட்சமாக தொடங்கியதாகவும், அமெரிக்காவிற்கு இதில் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இப்பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க படைகளை பாதுகாப்பதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அமெரிக்கா தெளிவுபடுத்தியுள்ளது.

இந்நிலையில் இரு நாடுகளுக்கிடையிலான பதற்றம் குறித்து இந்தியா தனது கவலையை வெளியிட்டுள்ளது.

பேச்சுவார்த்தை மற்றும் அரசியல் நடவடிக்கைகள் மூலம் சுமூக தீர்வு காண இந்தியா அறிவுறுத்தியது..

ஈரான் இஸ்ரேல் நாடுகளுக்கிடையிலான நிலைமையை இந்தியா உன்னிப்புடன் கண்காணித்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளும் இந்தியாவின் நட்புறவு நாடுகள் என்பதால் தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் இந்தியா கூறியுள்ளது.

***********

முதலமைச்சர்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றசம்பவங்கள் குறைவாக நடைபெறும் மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் தரவுகளை சுட்டிக்காட்டி இன்று முதலமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், போக்சோ குற்றங்களை எந்தவித அச்சமும் இல்லாமல், காவல் நிலையங்களில் நம்பிக்கையோடு புகார் அளிக்கும் விழிப்புணர்வு அதிகரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் மூலம் குற்றவாளியை உடனடியாக கைது செய்து தண்டனை பெற்றுத்தருவதோடு, எதிர்காலங்களில் குற்றங்களில் ஈடுபடாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறினார்.

பாலியல் குற்றங்களில் விரைவான விசாரணை அதிகபட்ச தண்டனை, போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

***********

முதலமைச்சர் - திமுக

திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கட்சி நிர்வாகிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

வரும் சட்டமன்ற தேர்தலில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலைப்பாடுகள் மற்றும் செயல்திட்டங்கள் குறித்து இதில் விவாதிக்கப்படுவதாக தெரிகிறது.

***********

ரத்த கொடையாளர்கள் தினம்

உலக ரத்த கொடையாளர்கள் தினம் நாளை கடைபிடிக்கப்படுகிறது.

இதையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

“ரத்ததானம் செய்வோம் நம்பிக்கையை ஏற்படுத்துவோம், ஒருங்கிணைந்து உயிர்களை காப்போம்” என்ற கருப்பொருளுடன் இந்தாண்டு ரத்த கொடையாளர்கள் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

திருச்சி பன்னாட்டு விமான முனையத்தில் உலக ரத்த தான முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று துவக்கிவைத்தார்.

மாநகராட்சி ஆணையர் திரு.வே.சரவணன் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

***********

எ.வ.வேலு

திருப்பத்தூர் மாவட்டத்தில் வரும் 25, 26ஆம் தேதிகளில் நடைபெற உள்ள அரசு நல திட்ட விழாவை ஒட்டி முன்னேற்பாட்டு பணிகளை மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு இன்று ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆட்சித்தலைவர் திருமதி சிவசௌந்தரவள்ளி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

***********

அமைச்சர்கள் ஆய்வு

சென்னை தண்டையார்பேட்டையில் மாநில எழுதுபொருள் மற்றும் அச்சுறுத்துறையின் சார்பில் அரசு அச்சக பணியாளர்களுக்காக புதிதாக கட்டப்படும் குடியிருப்புகளை மாநில அமைச்சர்கள் திரு.மு.பெ.சாமிநாதனும், திரு.சேகர்பாபுவும் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

முன்னதாக வட சென்னை வளர்ச்சி திட்டம் சார்பில் சென்னை திரு.வி.க நகர் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற பணிகளை திரு.சேகர்பாபு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து கலை பண்பாடு அருங்காட்சியகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் தொடர்பாகவும் அமைச்சர் திரு.சாமிநாதன் சென்னை தலைமை செயலகத்தில் ஆலோசனை மேற்கொண்டார்.

***********

நீலகிரி

நீலகிரி மாவட்டத்திற்கு கன மழை எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் 30 பேர் கொண்ட தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில் கன மழையால் மூடப்படும் சுற்றுலா தளங்களுக்கு செல்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என்று ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு கேட்டுக்கொண்டுள்ளார்.

மழை பாதிப்புகளை எதிர்கொள்ள தீயணைப்பு வருவாய் துறையினர் மாநில பேரிடர் மீட்பு படையினர் தயாராக உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

நாமக்கல்

நாமக்கல் மாவட்டம் வேட்டாம்பாடி கிராமத்தில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாமை ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தொடங்கிவைத்தார்.

இம்முகாமில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு நோய்தடுப்பு மருந்துகள் தடுப்பூசிகள் போடப்பட்டன.

கால்நடைகளுக்கான ஊட்டசத்து தீவன பொருட்களையும் அவர் வழங்கினார்.

மாவட்டத்தில் இந்தாண்டு 180 இடங்களில் கால்நடை பராமரிப்பு முகாம்கள் நடைபெற உள்ளதாக இதன் மண்டல இணை இயக்குனர் டாக்டர்.வீ.பழனிவேல் தெரிவித்துள்ளார்.

***********

நாகை

மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில் கடைமடை பகுதிகள்வரை தண்ணீர் செல்ல அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாகையை சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து எமது நாகை செய்தியாளர்

வாய்ஸ்

***********

மேட்டூர்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு ஆறாயிரத்து 896 கன அடியாக அதிகரித்துள்ளது.

டெல்டா பாசனத்திற்காக அணையிலிருந்து 10 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 114.89 அடியாகும்.

***********

இருவரி

தமிழகம் முழுவதும் பொதுவிநியோக திட்ட குறைதீர் முகாம் நாளை நடைபெற உள்ளது. இதில் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல் நீக்கம் உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக மனு அளித்து பயன்பெறலாம்.

வேலூர் மாவட்டத்தில் கோவிட் பாதிப்பு தொடர்பாக பொதுமக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சுப்புலெட்சுமி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் விஜயமங்கலத்தில் நடைபெற்றுவரும் இரண்டு நாள் வேளாண் கண்காட்சி இன்றும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதியவர்களில் விடைத்தாள் நகல்கோரி விண்ணப்பித்த மாணாக்கர் இன்றுமுதல் அதனை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என பள்ளிகல்வித்துறை அறிவித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே மாசார்பட்டியில் இன்று காலை நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

3 பேர் காயமடைந்தனர்.

திருச்செந்தூரில் இருந்து தஞ்சாவூர் நோக்கி சென்று கொண்டிருந்த காரும் தூத்துக்குடியிலிருந்து அரியலூருக்கு சென்று கொண்டிருந்த லாரியும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டது.

***********

தண்ணீர் திறப்பு

திருநெல்வேலி மாவட்டம் கொடுமுடியாறு நீர்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது.

120 நாட்களுக்கு வினாடிக்கு 50 கனஅடிக்கு மிகாமல் தண்ணீர் விடுவிக்கப்படுகிறது.

இதன்மூலம் இப்பகுதிக்குட்பட்ட ஐந்தாயிரத்து 780 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்.

***********

<u>வானிலை</u>

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, நீலகிரி, கோவை, மாவட்டங்களில் இன்றும் நாளையும் கன, மிக கனமழையும்,

திருநெல்வேலி ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, தென்காசி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தெற்கு வங்க கடல், அந்தமான் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் அடுத்த 5 நாட்களுக்கு இதற்குட்பட்ட பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்..

***********

<u>டென்னிஸ்</u>

சீனாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் சித்தார்த் விஸ்வகர்மா, முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற காலிறுதியில் அவர் – அமெரிக்காவின் இவான் சூவை 6-3 2-6 6-4 என்ற செட்களில் வென்றார்.

மற்றொரு காலிறுதியில் சசிகுமார் முகுந்த் தைவானின் **Tsung-Hao Huang** வை வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

***********